DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.1/2024**
**2025-ம் ஆண்டு மே திங்கள் 14- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | எஸ்டேட் கூலி |
| பெயர் | - | வெற்றிவேல் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ஆறுமுகம் | சமயம் | - | |
| கிராமம் | - | செங்குத்துப்பாறை எஸ்டேட் | வயது | - | 52/2025 |
| சாதி | - | | | | |

**14-05-2025**

**(1-ம் எதிரி ஆஜரில்லை. 2-ம் எதிரி ஆஜர்)**

(1-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் சிவா மற்றும் ரஞ்சித் பக்கத்து எஸ்டேட்டை சேர்ந்தவர்கள் அவர்களை எனக்கு தெரியும். கடந்த வருடம்ஜனவரி மாதம் 06-ம் தேதி நான் வால்பாறையில் இருந்து மாலை சுமார் 06.00-07.00 மணியளவில் வீட்டிற்கு போய்கொண்டிருந்தேன். செல்லும் வழியில் மாணிக்கா எஸ்டேட் அருகில் எதிரிகள் சிவா மற்றும் ரஞ்சித் ஆகியோர்கள் மதுபோதையில் ஆடிக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் ஒதுங்கிசெல்லும்மாறு கூறிவிட்டு நான் சென்றுவிட்டேன். அதற்கு பின்பு போலீசார் வந்துவிசாரித்து எதிரிகளிடமிருந்து கஞ்சா மற்றும் மதுபொருட்களை எடுத்துள்ளார்கள். இதை நான் தான் போலீசில் கூறினேன் என்று மறுநாள் 07-ம் தேதி ஞாயிற்று கிழமை எதிரிகள் என் வீட்டிற்கு வந்து என்னையும், என் மனைவியையும் நீதான் போலீசிரிடம் நாங்கள் கஞ்சா அடித்து இருப்பதாகவும், மது அருந்தியிருப்பதாகவும் போன் பண்ணி சொன்னதாக தகாத வார்த்தைகளால் தேவிடியா மகளே கண்டாரோலி மகளே என்றும் பெட்ரோல் ஊற்றி கொழுத்திவிடுவோம் என்று மிரட்டினார்கள். சம்பவத்தின் போது முருகவேல்மற்றும் பக்கத்து வீட்டைச்சேர்ந்த வேணியம்மாள் மற்றும் ஊர்க்காரர்கள் அருகில் இருந்தார்கள். பின்னர் நானும் என் மனைவியும் வால்பாறை காவல் நிலையம் சென்று நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்குவிசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.1/2024**

**2025-ம் ஆண்டு மே திங்கள் 14- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | ஜெயந்தி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | வெற்றிவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | செங்குத்துப்பாறை எஸ்டேட் | வயது | - | 38/2025 |
| சாதி | - | | | | |

**<u>14-05-2025</u>**

**(1-ம் எதிரி ஆஜரில்லை. 2-ம் எதிரி ஆஜர்)**

(1-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெற்றிவேல் எனது கணவராவார். எதிரிகள் சிவா மற்றும் ரஞ்சித் ஆகியோர்கள் தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக 1-ம் மாதம் 7-ம் தேதி ஞாயிற்றுகிழமையன்று நானும் எனது கணவரும் வீட்டில் இருந்தபோது எதிரிகள் இருவரும் 4, 5 நபர்களை அழைத்துக்கொண்டு எனது வீட்டிற்கு முன்பாக வந்து தேவிடியா மகளே என்றும் கெட்ட கெட்ட வார்த்தைகளால் திட்டி பெட்ரோல் ஊற்றி கொழுத்திவிடுவோம் என்றும், சத்தம் போட்டார்கள். என்கணவர் எதிரிகள் இருவரும் கஞ்சா அடித்து மது அருந்திஇருப்பதாக போலீசில் கூறினார் என்று எங்கள் வீட்டு முன்பு வந்து சத்தம் போட்டார்கள். சம்பவத்தின் போது அக்கம்பக்கத்தினர் கூடியிருந்தார்கள். நாங்கள் எதிரிகளிடம் சத்தம் போடாதிங்க என்று கூறினோம். பின்னர் நானும் என் கணவரும் காவல் நிலையம் சென்று என் கணவர் சம்பவம் குறித்து புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து குறுக்குவிசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.